www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V7T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

# வகுப்பு 7

நேரம் : 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1) தூண் என்னும் பொருள் தரும் சொல் ...............
அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை

2) புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ...............
அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்

3) எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ...............
அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

4) கல்வியில்லாத நாடு ............... வீடு.
அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத
இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

5) நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை ...............
அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

**II. குறுவினா: (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி)** **3×2=6**

6) கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

7) கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

8) பாரதிதாசனின் மனதைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?

9) கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

10) பதத்தின் இருவகைகள் யாவை?

**III. சிறுவினா: (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** **1×4=4**

11) இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.

12) கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

**IV. மனப்பாடப் பகுதி:** **1×4=4**

13) 'வைப்புழிக்' எனத் தொடங்கும் 'அழியாச்செல்வம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) **கலைச்சொல் எழுதுக:**
அ) Ocean ஆ) Child labour

15) **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**
அ) கண்மணி நாளை பாடம் படித்தாள்.
ஆ) மாடுகள் இப்பொழுது புல் மேயும்.

16) **ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக:**
அ) ............ பறக்கும்.
ஆ) ............ மணம் வீசும்.

17) **பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக:**
அ) தீ - ............
ஆ) பா - ............

**VI. விடையளி:** **1×5=5**

18) அ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**

**பயணங்கள் பலவகை**

முன்னுரை - பயணத்தின் தேவை - தரைவழிப் பயணம் - கடல்வழிப் பயணம் - வான்வழிப் பயணம் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) **கடிதம் எழுதுக:**

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com